இணைப்பு I

[. 52 ஆம் பக்கத்தில் 304 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினவின் விடையைக் காண்க.]

31-3-1973 அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற தமிழ் நாடு (அரசுப் பள்ளி யில்லாத பிற பள்ளிகளில் இருந்து) ஓய்வு பெற்ற ஆசிரியர் சங்க மாநாட்டில் எழுப்பப்பட்ட கோரிக்கைகளும் அவை பற்றி தற்போதைய நிலைமையும்:

கோரிக்கை 1 : விலைவாசிகள் தினமும் உயர்ந்து கொண்டே போவதாலும், தற்பொழுது பெறும் ஓய்வூதியம் மிக மிகக் குறைவாக இருப்பதாலும் 2-10-1970-க்குப் பிறகு ஓய்வு பெறும் ஆசிரியர் பென்ஷனர்களுக்குக் கொடுப்பது போலவே அந்த தேதிக்கு முன்பு ஓய்வு பெற்ற எல்லா ஆசிரியப் பென்ஷனர்களுக்கும் அவரவர் கிரேடுக்குத் தக்கபடி சீரான பென்ஷன் கொடுத்து உதவ வேண்டும்.

குறிப்புரை :

2-10-1970-க்கு முன் ஓய்வு பெற்றவர்களுக்கு பழைய சம்பள விகித அடிப் படையிலும் 2-10-1970 அன்று அல்லது அதற்குப் பின் ஓய்வு பெற்றவர்களுக்குப் புதிய சம்பள விகிதத்தின் அடிப்படையிலும்தான் ஓய்வூதியம் கொடுக்கப்படும். அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையிலும்கூட இதே நிலைமைதான். எனவே இந்தக் கோரிக்கையை அரசு ஏற்க இயலாது.

கோரிக்கை 2 : 2-வது சம்பளக் கமிஷன் சிபாரிசுப்படி எல்லா ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கும் 2-10-1970 முதல் கிராக்கிப்படி கொடுக்க வேண்டும்.

குறிப்புரை :

அவ்வப்பொழுது அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கு எவ்வளவு ஓய்வூதிய கிராக்கிப்படி (Pensioners Dearness Allowance வாங்கப்பட்டு வருகிறதோ அதே விகிதத்தில் அரசுப் பணியில்லாத (அதாவது உள்ளாட்சி மன்ற, மற்றும் தனியார்) கல்வி நிலையங்களிலிருந்து ஓய்வு பெறுபவர் களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. 1-4-1972 முதல் அவ்வாறு தரப்பட்டுள்ள ஓய்வு ஊதிய கிராக்கிப்படி ரூ. 5 ஆகும். மீண்டும் 1-10-1973 முதல் ரூ. 5 ஓய்வு ஊதிய கிராக்கிப்படி கொடுக்கப்பட்டு வருகிறது.

கோரிக்கை 3 : வைத்தியச் சலுகைக்காக ஒரு தொகையை நிர்ணயித்து மாதா மாதம் பென்ஷனோடு சேர்த்துத் தரவேண்டும்.

குறிப்புரை :

அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கே அரசுப் பள்ளி ஆசிரியர்களுட்பட இச்சலுகை இன்னும் வழங்கப்படவில்லை. ஆகையால் இக்கோரிக்கையை ஏற்க இயலாது.

கோரிக்கை 4 :

G.O. Ms. No. 380, Edn., dated 9th April 1969 பிரகாரம் எல்லா ஆசிரியர்களுடைய விதவைகளுக்கும் அவர்கள் மரணம் வரை பென்ஷன் தர வேண்டும்.

குறிப்புரை :

அரசுப் பள்ளியில்லாத பிற பள்ளி ஆசிரியர்களுக்குக் குடும்ப ஓய்வூதியம் குறித்து இதுவரை வெளியிடப்பட்டுள்ள அரசு ஆணைகளின்படி கீழ்க்கண்ட இரு வகையினர் குடும்பங்களுக்கு மட்டுமே (சில நிபந்தனைகளுக்குட்பட்டு) குடும்ப ஓய்வூதியம் தர இடமுண்டு.

(1) 1-4-1962 அன்று அல்லது அதற்குப்பின் ஓய்வுபெற்ற, ஓய்வு பெற்ற பின் இறந்துவிட்டவர்கள்.

(2) பணியிலிருக்கும் பொழுதே 1-4-1962 அன்று அல்லது அதற்குப்பின் இறந்துவிட்டவர்கள் (1-4-1962-க்கு முன் ஓய்வு பெற்றவர்களும் அவர்கள் 1-4-1962-க்குப் பின்னர் இறந்தாலும் சரி—பணியிலிருக்கும் பொழுதே 1-4-1962-க்கு முன் இறந்து விட்டவர்களும் இறந்தபின் குடும்ப ஓய்வூதியம் கொடுக்கத் தக்கவர்களல்ல.

கோரிக்கை 5 :

G.O. Ms. No. 1505, Edn., dated 24th September 1968 பிரகாரம் இன்னும் பென்ஷன் பெறாத ஆசிரியர்களுக்கு அவர்கள் வேலையிலிருந்து விலக நேரிட்ட காரணம் எதுவாக இருந்தாலும் தாராள நோக்கத்துடன் அச்சிலருக்கு 1-3-1968 முதல் குறைந்தபட்ச பென்ஷனைத்தர உத்தரவிட வேண்டும்.

குறிப்புரை :

ஏற்கெனவே இது குறித்து விளக்கங்களை அரசு வெளியிட்டுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS